[திரு. ர. ஜெபமணி] [1978 செப்டம்பர் 7

கோவையில் ஒரு மாநாடு நடந்தது. தமிழர்களைப் பார்த்து, உடன் பிறப்பே என்று பேசினார்கள். உடன் பிறப்பு வாழவேண்டும் என்று பேசினார்கள். கள்ளுக்கடை, சாராயக்கடை திறக்கிறோம், மது விலக்குக் கொள்கையை நாங்கள் கொஞ்சகாலம் ஒத்தி வைக்கிறோம் என்று சொன்னார்கள். பலன், புகாத இடத்தில் எல்லாம் மது புகுந்துவிட்டது. இளைஞர்களின் பசுமையான மனதில் அது பதிந்து விட்டது. தாய்மார்கள் குடிக்க ஆரம்பித்து விட்டார்கள். தமிழர்கள் பல லட்சம் பேர் வீட்டில் இருக்கும் பண்டம் பாத்தி ரங்களை விற்றுகுடிக்கிறார்கள். அதனால் அவர்கள் எல்லாவற்றையும் இழந்து விட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு தற்போது வாழ வழி இல்லை. இந்த நிலையைப் போக்க நாம் என்ன செய்வது, என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். கொண்டு வந்தவர்களைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. நடந்ததைச் சொல்லிவிட்டு மட்டும் நான் நிறுத்தக் கூடாது. அதற்கு வழியும் பரிகாரமும் சொல்ல வேண்டும். போலீஸ் நிர்வாகத்தை நம்பி மட்டும் நாம் இருக்கக்கூடாது. அவர்கள் என்ன செய்வார்கள். பிடித்தாலும் சம்பளம், பிடிக்கா விட்டாலும் சம்பளம். எவன் குடித்தால் நமக்கு என்ன என்று இருப்பார்கள்.

(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை—8-9-1978 காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(8) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

84. தருமபுரி மாவட்டம், ஆன்செட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு டி. என் நாகேந்திரமூர்த்தி என்பவருக்குச் சொந்தமான MYV 7690 ஆம் எண்ணுள்ள சிறிய பயணிப் பேருந்தைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க சலுகைவீத வரியினைத்திருத்தியமைப்பது குறித்த, உள்துறையின் (போக்குவரத்து-I) 27-6-1978 ஆம் தேதியிடப்பெற்ற, 1475 ஆம் எண் அரசு ஆணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது],

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

20. சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின் மீதான உயர் மட்டக் குழுவின் அறிக்கை (இரு தொகுப்புகள்).